Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி. எண். 49
வேலை 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 138
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சேகை ஆனி 15 ரபி: ஆகி 1 வெள்ளிக்கிழமை (28-6-66)




# வானொலியில் அரசியல்கட்சி தேர்தல் பிரசாரம்

## தேர்தல்சட்டம் பற்றி தெரிவுக் குழு சிபார்சு

## தனியார் வாகனத்தடை; கூட்டு முன்னணிச்சின்னம்பற்றியோசனை

கொழும்பு, வியாழன்

ஆட்சிமன்றப் பொதுத்தேர்தலில் வாக்களிப்புத்தினத்தில் தனியார் போக்கு வரத்து வாகனங்கள் பிரயாணம் செய்வதற்குத் தடை விதிக்கவேண்டுமென்றும், பத்துக்கு மேற்பட்ட அபேட்சகர்களை தேர்தலில் நிறுத்தும் அரசியல் கட்சிகளுக்கு கட்டணமில்லாமல் வானொலியில் தேர்தல் பிரசாரம் செய்ய அனுமதியளிக்க வேண்டுமென்றும் ஆட்சிமன்றத் தேர்தல் சட்ட விதிகள் பற்றி ஆராய்ந்த ஆட்சிமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையில் சிபார்சு செய்திருக்கிறது.

ஆட்சிமன்ற உறுப்பினர்களைக்கொண்டு நியமிக்கப்பட்ட இத்தெரிவுக்குழு ஆட்சிமன்றத் தேர்தல் விதிமுறைகளைப்பற்றி ஆராய்ந்து தயாரித்த அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறது.

பொதுத்தேர்தல் வாக்களிப்பு தினத்தில் வாக்காளர்களை அபேட்சகர்களின், ஆதரவாளர்கள் வாகனங்களில் கொண்டு செல்வதற்கு இப்பொழுது தடைவிதிக்கப்பட்டிருப்பினும் வாக்களிப்புத்தினத்தில் வாக்களிப்புத் தொடங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவும் வாக்களிப்பு முடிவடைந்து ஒரு மணிநேரத்துக்குப் பின்னரும் தனியார்போக்குவரத்து வாகனங்கள் பிரயாணம் செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று அந்தஅறிக்கையில் சிபார்சுசெய்யப்பட்டிருக்கிறது. தேர்தல் அதிகாரிகள், தேர்தலில்போட்டியிடும்அபேட்சகர்கள், அவர்களது ஏஜன்டுகள் மட்டும் வாகனங்களை உபயோகிக்கலாம். இவர்கள் தவிர முன் அனுமதி பெற்றவர்களும் வாகனங்களை உபயோகிக்க அனுமதியளிக்கலாம் என்றும் தெரிவுக்குழு சிபார்சு செய்திருக்கிறது.

பொதுத்தேர்தலில் பத்துக்கு மேற்பட்ட அபேட்சகர்களை நிறுத்தும் அரசியல் கட்சிகளுக்குவானொலிமூலம் பிரசாரம் செய்வதற்குஅனுமதியளிக்கலாம் என்றும் தெரிவுக்குழு சிபார்சு செய்துள்ளது. கூட்டணி அமைத்துதேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் தங்களுக் குரிய சின்னங்களுள் ஒன்றை பொதுச் சின்னமாகத் தெரிவு செய்து உபயோகித்துக் கொள்ளவோ, புதிய சின்னம் ஒன்றைத்தெரிவுசெய்து கொள்ளவோ அனுமதியளிக்கலாம் என்றும் தெரிவுக்குழு சிபார்சு செய்திருக்கிறது.

---

ஜெனிவாவில் அணுசக்தி நாடுகள்

## மகாநாட்டுக்கு ஐ. நா. சீனுவை அழைக்கிறது

நியூயோர்க், ஜூலை 27

ஜெனீவாவில், அடுத்த ஓகஸ்ட் மாதம், ஐ. நா. சபையின் ஆதரவில் நடைபெறவிருக்கும் அணுசக்தி ஒப்பந்த நாடுகளின் மகாநாட்டுக்குச் சீனுவும் அழைக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்புக்குச் சீனுவிடமிருந்து பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ. நா. சபையில் அங்கத்துவம் வகிக்காத ஒருநாடு, ஐ நா மாநாடொன்றுக்கு அழைக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் உத்தேச மாநாடு பற்றி ஐ நா பொதுக்காரியதரிசி யூ தாண்ட், ஐ நாவின் சகலஅங்கத்தவர்களுக்கும், ஏஜென்ஸிகளுக்கும் தெரிவித்துள்ளார்.

---

## 14பேர்மீதானகுற்றச்சாட்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது

### எதிரிகளுக்கு ரூ. 750 அபராதம்

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த என். சிவபாதசுந்தரம், எஸ். விசுவநாதன், ரி. கந்தசாமித்துரை, ஐ. மயில்தாஸ், வி. இரத்தினசோதி, எஸ். ஆறுமுகசாமி, குட்டிப்பிள்ளை, எஸ். சுந்தரராஜா, பி. நடேசலிங்கம், ஆர். ஜெயச்சந்திரன், கே. தனிநாயகசிங்கம் ஆர். சிவஞானம், ஏ. வேதவனம், வி. சுந்தரவேலு ஆகிய 14 பேரும் வல்வெட்டித்துறைக்கடலில் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாக சுங்கப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு யாழ். அரசாங்க அதிபர் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அரசாங்க அதிபர் எதிரிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 2000 அபராதம் விதித்தார். எதிரிகள் தமக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்தத் தவறிய காரணத்திற்காக சுங்கப் பகுதியினர் எதிரிகளுக்கு எதிராக பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் வழக்கொன்றைத்தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கில் எதிரிகள் 14பேரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தலா 750 ரூபா அபராதம் அல்லது ஆறு மாதச் சிறை விதிக்கப்பட்டுள்ளது. குட்டிப்பிள்ளை என்ற 7வது எதிர் கோர்ட்டில் ஆஜராகத் தவறியதால் அவர் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

## அச்சுவேலி வீடமைப்புத்திட்ட முதற்கட்டம்இன்று திறப்பு விழா

### உள்ளூராட்சி அமைச்சர், உதவி அமைச்சர் கலந்து கொள்கிறார்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அச்சுவேலி சிறுபான்மைத் தமிழர் வீட்டுக்குடியேற்றத் திட்டத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இன்று மாலை 5 மணிக்கு உத்தியோகபூர்வமாகத் திறந்துவைப்பார். இவ்வைபவத்தில் உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவும் கலந்து கொள்வார்.

உள்ளூராட்சி அமைச்சினால் நிறுவப்பட்ட இவ்வீடமைப்புத்திட்டத்தில் மொத்தம் 54 குடும்பங்கள் அமர்த்தப்படும். இக்குடியேற்றம் இவ்வாரத்தில் நடைபெறும்.

திறப்பு விழாவின் பின் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் தமிழரசுக் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸா, வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம், அச்சுவேலி கிராம சபைத் தலைவர் திரு. சபாரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்துவர். நடன, நாடக கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இரண்டாவது கட்டம்

அச்சுவேலி வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்துக்குரிய வேலைத் தள புதிய அலுவலகக்கட்டடமும் களஞ்சியக் கட்டடமும் குறுகிய காலத்திலேயே கட்டப்பட்டுள்ளது. இவை ஐந்துநாட்களில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடம் உள்ளூராட்சிப் பகுதி நிர்மாணப்பொறியியலாளரால் மேற்பார்வை செய்யப்படுகிறது. (ந.தி.)

---

## நேர்மையுடன் நடந்து பாராட்டுப்பெற வேண்டும்

### இங்குவரும் தமிழகக் கலைஞர்களுக்கு சிதம்பரம் ஜெயராமன் யோசனை

கொழும்பு, வியாழன்

"தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்குமிடையே பாரம்பரியமாக உள்ள தொடர்பு வலுப்படுத்தப் படவேண்டும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வரும கலைஞர்கள் நேர்மையாக நடந்து இலங்கை அரசின் பாராட்டைப் பெறவேண்டும்" என்று பிரபல பின்னணி பாடகர் திரு எஸ். ஜெயராமன் வெள்ளவத்தை சம்மங்கோட்டார் விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இசைவிழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

செவ்வாய்க்கிழமை இரவு இசைவிழா நிகழ்ச்சிகளின் பாது திரு ஜெயராமன் பேசியதாவது!

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒரு காரியத்தைச் செய்கையில், அதை நமக்குள் இருக்கும் தெய்வமே செய்விப்பதாகவும், அந்த தெய்வ சக்தியே எல்லாக் காரியங்களையும் செய்வதாயும் எவ்வளவுக்கெவ்வளவு நம்புகிறோமோ, அவ்வளவும் 'நான்' என்ற அகந்தை நீங்கி நம்மனம் குழந்தை மனமாகி, தெய்வீகமாவோம்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

அத்திலோ கலீலை கீலகவருஷம் ஆனி மாதம் 15-ந் திகதி
(28-6-68)


## நீடிக்கும் வேலைநிறுத்தம்

ஒரு மாதத்துக்கு மேலாக நீடித்துவரும் தொழில் அதிகாரிகளின் வேலைநிறுத்தம் இப்போது புதியதொரு திருப்பத்தை அடைந்திருக்கிறது. தொழில் அதிகாரிகளுடன் மதிலுங்கு பதில் தொழில் உதவி ஆணையாளர்களும் வேலைநிறுத்தத்தில் சேர்ந்துள்ளனர். இனி தொழில் ஆணையாளர்களும் தொழில் மந்திரியும்தான் வேலைநிறுத்தத்தில் சேர வேண்டும். இந்த வேலை நிறுத்தம் நீடித்து வருவதையும் இதற்கு ஒரு சமரசத் தீர்வுகாண முயற்சி எடுக்கப்படாததையும் கவனிக்கும்போது தொழில் அமைச்சரும் வேலைநிறுத்தம் செய்கின்றாரோ என்ற சந்தேகம் எழுவது இயல்பு.

தொழில் அதிகாரிகள் வேலைநிறுத்தம் ஆரம்பித்ததும் அப்படியொரு விஷயம் நடைபெறுவதே தெரியாதது போன்று தொழில் அமைச்சர் வெளிநாட்டுப்பிரயாணம் சென்றார். சிலதினங்களுக்கு முன் திடீரென நாடுதிரும்பிய அவர் 'வேலைக்குத் திரும்புங்கள்' என்று வேலைநிறுத்தம் செய்யும் தொழில் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் தமது கடமை முடிந்து விட்டதென்பது அவர் கருத்துப் போலும்.

அரசாங்க சேவையிலுள்ள இதர இலாகாக்களைச்சேர்ந்த ஊழியர்களானாலும் தனியார்துறை ஊழியர்களானாலும் வேலைநிறுத்தம் செய்வதற்கும் தொழில் இலாகா அதிகாரிகள் வேலைநிறுத்தம் செய்வதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இதர அரசாங்க ஊழியர்களின் வேலைநிறுத்தப் பிரச்னையில் தலையிட்டு பிரச்னையைத் தீர்த்துவைக்க வேண்டிய பொறுப்பு தொழில் அமைச்சரையே பெரும்பாலும் சார்ந்திருக்கும். தனியார்துறையினரின் வேலைநிறுத்தப் பிரச்னையிலும் இதே நிலைமைதான். வேலை நிறுத்தத்தில் தொழில் அமைச்சர் தலையிட்டு பிரச்னைக்கு ஒரு முடிவுகாண வேண்டுமென்றே வேலைநிறுத்தம் செய்யும் ஊழியர்களும், முதலாளிமார்களும், அரசாங்க இலாகாக்களுக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளும் எதிர்பார்ப்பார்கள். தொழில் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் 'முதலாளி'யும், நிர்வாகியும் தொழில் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்புள்ள தொழில் அமைச்சர்தான். அந்த அமைச்சைச்சேர்ந்த, தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஊழியர்களின் குறைநிறைகளை விசாரித்து அறிந்து, உரிய முயற்சி செய்து, வேலைநிறுத்தத்துக்கு ஒருமுடிவு காண்பதற்கு தொழில் அமைச்சரால் முடியவில்லையானால் வேறு எந்தவேலைநிறுத்தத்தைத்தான் தவிர்ப்பார்; எதைத்தான் தீர்த்துவைப்பார் என்ற அவநம்பிக்கை மக்கள் மதியில் தோன்றக்கூடும்.

சம்பளமுரண்பாடுதான் தொழில் அதிகாரிகளின் வேலைநிறுத்தத்துக்கு முக்கிய காரணம். வேலையில்லாமல் லட்சத்துக்கதிகமான படித்தவாலிபர்கள் திண்டாடுவதையும் படித்த இளைஞர்களும் மற்றும் பலரும் வாழ்க்கைச் செலவு உயர்வினாலும் போதிய வருவாயில்லாமலும் கஷ்டப்படுவதையும் நன்கு தெரிந்த தொழில் அதிகாரிகளும் பதில் உதவி ஆணையாளர்களும் இச்சமயத்தில் நீண்டகாலத்துக்கு வேலைநிறுத்தம் செய்வதாக இருந்தால் அவர்களுடைய கோரிக்கைகளில் நியாயமில்லாமலிருக்க முடியாது.

அரசாங்க ஊழியரின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக திருத்தம் செய்வது பிரச்னைகளை மேலும் அதிகரிக்குமென்றும் அரசாங்க ஊழியர் சம்பளம்பற்றி முழுதாகப்பரிசீலனைசெய்ய புதிய முறையொன்றை அமைப்பது பற்றி ஆராய புதிய சம்பளக் கமிஷன் ஒன்றை நியமிப்பதென்றும் மந்திரிசபை தீர்மானித்திருக்கிறதாம். இக்கமிஷனை விரைவில் அமைப்பதன் மூலம் அரசாங்க ஊழியர் மத்தியில் முணுமுணுப்பு குறையலாம். இந்தச் சம்பளக்கமிஷன் நியமனத்தை எடுத்துக்காட்டி தொழில் அதிகாரிகளின் வேலைநிறுத்தத்துக்கும் தொழில் அமைச்சர் முடிவுகாணலாம். பிரச்னை வளரவிடுதால் அவை தீர்வதற்குப்பதில் அதிகரிக்கும். தொழில் அமைச்சர் விழிப்புடன் சுறுசுறுப்பாக செயலாற்றவேண்டுவது அவசியம்.

# "தீமைகளைப் பற்றி நாம் சொன்னோம் நன்மைகளை அவர்கள் சொல்லவில்லை"

## காரைநகர் கூட்டத்தில் மாவட்டசபை பற்றி ஜி. ஜி.

யாழ்ப்பாணம், வியாழன்

"பாராளுமன்றத்தில் மாவட்டசபை வெள்ளை அறிக்கை விவாதம் நடைபெற்றபோது மாவட்ட சபையால் தமிழருக்கு ஏற்படவிருக்கும் நன்மை பற்றி ஒரு தமிழ் பேசும் எம். பி. யாவது வாய் திறந்து பேசவில்லை. மாவட்டசபையால் தமிழருக்கு ஏற்படவிருக்கும் தீமை பற்றி நானும் வவுனியா எம் பியும், சமஷ்டிக் கட்சியை உருவாக்கிய ஊர்காவற்றுறை எம். பி.யும் மணிக்கணக்காகபேசினோம். மாவட்டசபையால் வரும் தீமைகள் பற்றி முஸ்லிம் எம் பிக்களும் பேசினார்கள்."

காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் மாவட்டசபை பற்றி திரு ஜி ஜி பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஜி ஜி பொன்னம் மேலும் கூறியதாவது:

மாவட்டசபையினால் தமிழினம் அடையப்போகும் கஷ்டங்களை எண்ணித்தான் நான் அதனை எதிர்க்கிறேன். சமஷ்டிக்கட்சியினர் மாவட்டசபையை கொண்டு வருகிறார்கள் என்பதற்காக நான் எதிர்க்கவில்லை. அப்படியிருந்தால் சமஷ்டிக் கட்சியினர் கொண்டு வந்த தமிழ்மொழிச் சட்டத்தை ஆதரித்து நான் வாக்களித்திருக்கமாட்டேன். தமிழ் மொழி மசோதவினால் தமிழர்களுக்கு நன்மை இல்லை என்று எனக்குத் தெரியும். அம்மசோதாவினால் தீமை தீமையுமில்லையென்பதனால் அதனை ஆதரித்தேன்.

ஆனால் மாவட்டசபை மசோதவினால் தமிழினத்திற்கு தீமையுண்டு என்பதால் எதிர்க்கிறேன்.

தமிழ்ப் பகுதியிலுள்ள மாவட்டசபைகள் உட்பட எல்லா மாவட்டசபைகளிலும் சிங்களமே அரசாங்க மொழி நிர்வாகமொழியாக இருக்குமெனப் பிரதமரே கூறியுள்ளார். இதனால் வருங்காலத்தில் தமிழினம் பெரும் கஷ்டத்திற்குள்ளாகும். தமிழினத்தின் ஏகோபித்த எதிர்ப்பின் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இதுவரை காலமும் அமுல் செய்யப்படாமலிருந்த சிங்களம் மட்டும் சட்டம் மாவட்டசபைகள் மூலம் அமுல் செய்யப்படும். அதன்பின்னர் தமிழ் மொழிச்சட்டம் பயனற்றதாகிவிடும். நாடு முழுவதும் சிங்களமே ஆட்சி புரியும்.

திருவாளர்கள் வி ஆனந்தசங்கரி, க சோமசுந்தரம், எஸ் நவரத்தினம் மற்றும் பலர் பேசினார்கள்.

## ஆலய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

3 வருடங்கள் திருவிழா நடைபெறாது திருப்பணி வேலைகள் நடைபெற்றபின் கும்பாபிஷேகம் நடைபெற்ற நவாலியூர் அட்டகிரிக் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம் நாளை ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவிருக்கிறது.

ஃ ஃ ஃ

திருக்கேதீச்சர மகா சகஸ்திர சங்காபிடேகவிழா அடுத்தமாதம் 12-ம் திகதி நடைபெற இருக்கிறது.

ஃ ஃ ஃ

புலோலி, வெள்ளி

புலோலி தெற்கு புற்றளை பிள்ளையார் வருடாந்தஉற்சவம் இம்மாதம் 30 ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெற இருக்கிறது.

ஃ ஃ ஃ

குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்மன் கோவில் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 6-ந் திகதி தேர்த் திருவிழாவும் 7-ந் திகதிதீர்த்தத் திருவிழாவும் நடைபெற இருக்கிறது.

ஃ ஃ

காரைநகர் — தோப்புக்காடு, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் அஷ்டோத்திர சதசங்காபிஷேகத் திருவிழா அடுத்த மாதம் 2-ந் திகதி நடைபெற இருக்கிறது.

ஃ ஃ

நாவுட்டான் முத்துமாரி அம்மன் மண்டலாபிஷேக 2-ம் நாள்விழா இன்று நடைபெற இருக்கிறது. பகல் விசேட ஸ்பனாபிஷேகமும் பூசை ஆராதனைகளும் இரவு மெல்லிசை, வில்லுப்பாட்டும் இடம்பெற இருக்கின்றன.

ஃ ஃ

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகி அடுத்த மாதம் 8-ந் திகதி ரதோற்சவமும் 9-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெற இருக்கின்றன.

% ஃ

அளவெட்டி, வெள்ளி

மாதகல் நுணசை முருகமூர்த்தி தேவஸ்தான அன்னதான சபையினர் இம்மாதம் 30-ந் திகதி மாணிக்க வாசகர் குருபூசை கொண்டாட இருக்கின்றனர்.

ஃ ஃ

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெற இருக்கிறது. 24-ந் திகதி இரதோற்சவமும் 25-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## எல்லைகளை பார்வையிட்டார்

சுழிபுரம், வியாழன்

புதிதாக நிறுவப்படவிருக்கும் பண்டத்தரிப்பு பட்டின சபைக்கு சுழிபுரம் கிராம சபையுடன் இதுவரை இருந்துவந்த மூன்று வட்டாரங்கள் இணைக்கப்படுகின்றன. இதுசம்பந்தமாக எல்லைகளை நிர்ணயிப்பதுபற்றி வடபகுதி உள்ளூராட்சி விசாரணையாளர் திரு.ஜே.வர்ணகுலசூரியர் சுழிபுரம் கிராம சபைப் பகுதியுடன் இணைந்திருந்த வட்டார எல்லைகளை நேர்முகமாகப் பார்வையிட்டார். இவ்விஷயமாக தற்போதைய வட்டார அங்கத்தவர்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

# ஐயாறன் எழுதுகிறார்

யாழ்ப்பாணம் கோட்டடிப் பகுதிக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. அங்கு வில்லூன்றி விநாயகர் ஆலயத்தின் புதிய 5 அடுக்கு ராஜகோபுரகும்பாபிஷேகம் நேற்று நடைபெற்று கோவிலின் அழகும் அருளும் பெரிதும் உயர்ந்துள்ளது.

ஸ்ரீ ராமர் இலங்கைக்கு வந்தபோது தமது வில்லை இங்கு ஊன்றியதாயும் அதனாலேயே இதற்கு பூர்வ தனுஷ்கோடி அல்லது வில்லூன்றி என்ற பெயர் ஏற்பட்டதாயும் இங்குள்ள தீர்த்தக்குளம் புனிதமானதென்றும் அறிந்தேன். தென்னஞ்சோலைகளுக்கிடையே இயற்கை அழகு கொஞ்சும் சூழ்நிலையில் அமைந்துள்ள இந்தக் கோவிலுள்ள வில்வ தளங்களும் பன்னீர் முதலிய மரங்களும் மனதைக் கவர்கின்றன, வில்வ மரத்தை பார்த்தாலே, பெரும் பாவங்களெல்லாம் நீங்கி விடுமாம். அமைதியாக இருந்து தியானம்செய்ய நல்ல இடம். மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் அமைந்த இந்த இடத்திலுள்ள கோவிலுக்கு கோபுரமில்லாதது பெரிய குறைவாக இருந்தது. இக் குறை இப்போது தீர்ந்தது. கோவிலுக்கு அழகான மகுடம் வைத்தது போல் இருக்கிறது.

ஃ ஃ ஃ

குருக்கள்மார்கள் வெகுநேரம் மந்திரகோஷங்கள் செய்தனர். அதற்கெல்லாம் விசேஷமான அர்த்தம் இருக்கவேண்டும். இந்த மந்திரங்களுக்குப் பொதுவான கருத்துக்களை விளக்கி இவ்வித சந்தர்ப்பங்களில் சிறிய நூல்களாக வெளியிட்டால் அதிக பயன் ஏற்படலாம்.

செல்வம் இருந்தாலும், இவ்வித நல்ல காரியங்களைச் செய்ய புண்ணியம்செய்திருக்க வேண்டுமென்றும் கோவில் தர்மகர்த்தாவை இவ் விஷயத்தில் பெரிதும் போற்றவேண்டுமென்றும் ஓரன்பர் உணர்ச்சியுடன் பாராட்டினார்.

பலலாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது இக் கோவில் கோபுரம். தமிழரின் சிறப்பும் பெருமையும், கோவில் கோபுரத்தில் அதிகம் இருப்பதால் தான் தமிழகஅரசு கூட, தனது அரசாங்க முத்திரையில் கோவில் கோபுரத்தைப் பொறித்துள்ளது.

கோபுரங்களை பெரும் பணச்செலவில் உயர்வாகத் தமிழர் கட்டியுள்ளதின் நோக்கமென்ன? எங்கிருந்தாலும்- கோபுரத்தைப் பார்த்தால் இறைவன் ஞாபகம் வரும். கடவுள் நினைப்புவந்தால், மனம் சுத்தமாகி தவறுசெய்யாமல் பாதுகாத்துக்கொள்ளலாம். கடவுளை அதாவது அன்பை மறக்கும் போது தானே மனம் தவறுசெய்கிறது!

பெரும் பணச்செலவில் மிகக் கஷ்டப்பட்டு கட்டும் கோவில்களை தக்கபடிபூரணமாகப் பயன்படுத்துகிறோமா? இதைப்பற்றி சற்றே சிந்தித்தால் இல்லை என்றுதான் பதில் கிடைப்பதாக இருக்கும்.

தமிழர்களுக்கு தெய்வ பக்தி இயற்கையாக உண்டு. தங்கள் வீட்டிலும் சரி, கிராமத்திலும் சரி ஏற்படும் சிறிய பெரிய தகராறுகளை, கோவிலுக்கு வந்து சமரசமாகப் பேசியோ அல்லது பூக்கட்டிப்போட்டு, சுவாமியின் உத்தரவின்படியோ நடப்பதென்று தீர்மானித்தால், வீடும் கிராமமும்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

சண்டை சச்சரவுகளின்றி எவ்வளவோ முன்னேறும், பிளவுகள் ஏற்படா, ஏற்பட்டாலும் உடனுக்குடன் தீர்ந்து, ஒற்றுமை பலப்படும், முன்காலத்தில் குடும்ப, கிராமப் பிணக்குகளை இப்படித்தான் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வர். நமது பிணக்குகளைத் தீர்க்க கடவுள் தயாராக இருக்கிறார். நம்பிக்கையுடன் அவரைப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

இப்புதிய கோபுரத்தைக் கண்டதும், வண்ணை சிவன் கோவில் கோபுரம் எப்போது கட்டப்படப்போகிறதென்று கவலையுடன் கேட்டார் ஓரன்பர். சில வருடங்களுக்கு முன்போட்ட அத்திபாரம் இன்னும் எழுப்பக் காணோம். சீக்கிரத்தில் இக்கோபுரம் கட்டப்பட்டால்தான், யாழ்ப்பாணத்துக்கே விமோசனம் ஏற்படும். பாலாம்பிகை சமேதவைத்திலிங்கேசப் பெருமான் திருவருள்செய்ய வேண்டும்.

ஃ ஃ ஃ

பிறப்போடிறப் பென்றுமிலாதான் காண் பெண்ணுருவோடாணுருவமாயினான் காண் மறக்கப்படுமென் சிந்தைமருள் நீக்கினான் காண் வானவருமறியாத நெறிதந்தான் காண், நறப்படு பூமலர் தூபதீப நல்ல நறுஞ் சாந்தங்கொண்டேத்தி நாளும் போற்றுஞ் சிறப்பொடு பூசிக்குந் திருவாரூரிற் திருமூலட்டானத்தெஞ் செல்வன்தானே.

— அப்பர் மூர்த்திகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவும் வட வியட்னாமும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

## பாரீஸ் பேச்சு வார்த்தைகளில்

பாரிஸ், ஜூன் 27

நேற்றுப் பாரிஸில் நடைபெற்ற வியட்னாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது வடவியட்னாமிடமிருந்து ஏதாவது ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை கிடைக்கும் என்ற உறுதி இருந்தால்தான், வடவியட்னாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்காவினால் நிறுத்த முடியும் என்று அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டித்தலைவர் திரு வான்ஸ் மறுதரப்பினரிடம் தெரிவித்தார்.

தென்வியட்னாமுக்குள் இப்போதும் முறையான துருப்புகளை வடவியட்னாம் அனுப்பிவருவதாகவும், ராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருவதாகவும் திரு. வான்ஸ், வடவியட்னாமியர் மீது குற்றஞ்சாட்டினார்.

வடவியட்னாம் பிரதிநிதிகள் தலைவரான திரு. ஸுவான் தியூ, அமெரிக்கா வடவியட்னாமின்மீது குண்டு வீசுவதை நிறுத்த வேண்டுமெனத் திரும்பவும் வலியுறுத்தினார்.

வியட்னாம் சம்பந்தமாக அமெரிக்காவுடன் செய்து கொள்ளும் எந்தவொரு அரசியல் உடன்படிக்கைகளிலும் வெளிநாட்டு விவகாரங்களில் தென்வியட்னாமின் நடுநிலைமையை வடவியட்னாம் அங்கீகரிக்குமெனவும் திரு. தியூ கூறினார்.

பேச்சுவார்த்தைகள் ஒரு வாரத்துக்குப் பின்போடப்பட்டுள்ளன.

## இரு தரப்பினர் மீதும் சர்வதேசச்சங்கம் கண்டனம்

இதற்கிடையில், சர்வதேச மனித உரிமைகள் சங்கம், வியட்னாம்போரில் சர்வதேசப் போர் முறைக்கோட்பாடுகளை அத்துமீறியுள்ளதாக வியட்னாம் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர் மீதும் குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தின் கூட்டத்தில் 20 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## போர்நிறுத்த மேற்பார்வைக்கு சமஷ்டி நைஜீரியா சம்மதம்

லண்டன், ஜூன் 27

சமஷ்டி நைஜீரியா, நைஜீரிய உள்நாட்டுப்போர் நிறுத்தமொன்றை மேற்பார்வை செய்வதற்கான வெளிநாட்டுச் சமாதானப்படை நிறுவுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

இத்தகவலை பிரிட்டிஷ் மந்திரி திரு. தொம்ப்ஸன் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நேற்று வெளியிட்டார்.

பிரிவினை பியாவ்ராவுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கும், சமஷ்டி நைஜீரியத் தலைவர் ஜெனரல் கவான் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் திரு. தொம்ப்ஸன் மேலும் குறிப்பிட்டார்.

## பத்திரிகைகளும் வகுப்புவாதமும்

### பஞ்சாப் முதல் மந்திரி நடவடிக்கை எடுப்பார்

அமிர்தசரஸ், ஜூன் 27

ஸ்ரீநகரில் கூடிய இந்திய தேசிய ஒருமைப்பாட்டுச் சபையின் சிபார்சுகளை எழுத்திலும் கருத்திலும் தமது அரசாங்கம் அமுல் செய்யும் என்று பஞ்சாப் முதல் மந்திரி திரு. லக்ஷ்மண்சிங்கில் நேற்று அமிர்தசரஸில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் உறுதியளித்தார்.

ராஜ்யங்களில் வகுப்புவாத பிரச்சாரத்தையும், வகுப்புவாதப் பத்திரிகைகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் வகுப்புவாதம் தலைதூக்குவதைத் தடுப்பது கஷ்டமான காரியம் என்றார் திரு. கில்.

பத்திரிகைகளிலிருந்து வகுப்புவாத அம்சத்தை ஒழிப்பது பற்றி ஆலோசிக்க பஞ்சாப் பத்திரிகையாளர்கள் விரைவில் ஒரு கூட்டத்திற்கு அழைக்கப்பட விருப்பதாகவும் திரு. கில் தெரிவித்தார்.

---

## அமைச்சரை சந்திப்பர்

குரும்பசிட்டி, விசா.

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி சேவையில் மாதவிதவை ஸ்தானமான ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் இம்மாதம் 28-ந் திகதி தமது சங்கப் போஷகர் செனட்டர் திரு. எஸ். நடராசா தலைமையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தை சந்தித்துப் பேட்டி காணவிருக்கின்றனர்.

## வேணனின் சேவைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி அடுத்தமாதம் முதல் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. வேணன் அபயசேகராவுக்கு யாழ் மாவட்ட கிராமசேவையாளர் சங்கத்தால் தேநீர் விருந்தும் பிரியாவிடை உபசாரமும் அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு சங்கத் தலைவர் திரு. இராமச்சந்திரன் தலைமை வகித்தார். திரு. வேணன் அபயசேகராவின் சேவையைப் பாராட்டிப் பலர் பேசினார்கள்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, காரியாதிகாரி திரு. புள்ளைநாயகம் ஆகியோரும் சமூகம் கொடுத்திருந்தார்கள். [கா. நி.]

---

## மௌன அஞ்சலி

பண்டத்தரிப்பு, விசா.

யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. பாலசிங்கம் காலமானது குறித்து இளவாலை என்றியரசர் கல்லூரி விளையாட்டுப் போட்டியின் போது ஒரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சபா விவகாரம்

### மலேஷியா குற்றச்சாட்டு

பாங்கொக், ஜூன் 27

மலேஷியாவும், பிலிப்பைன்சும் உரிமை கொண்டாடும் சபா என்னும் பிரதேசம் சம்பந்தமாகப் பிலிப்பைன்ஸ் ஒரு முக்கிய தஸ்தாவேஜை மாற்றியமைத்துவிட்டதாக மலேஷியா குற்றஞ்சாட்டியுள்ளது.

சபாபற்றிய பேச்சுவார்த்தைகள், இருநாட்டுப் பிரதிநிதிகளுக்குமிடையே பாங்கொக்கில் நடைபெற்று வருகின்றன.

---

## ஒருவரை அடையாளம் காட்டினர்

குரும்பசிட்டி, விசா

சண்டிலிப்பாய் கொலை, வீடுகள் தீவைப்பு சம்பந்தமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் எம். தர்மலிங்கம் என்ற ஒருநபரைமட்டும் இரு சாட்சிகள் இன்று மல்லாகம் பதில் நீதிபதி திரு. எஸ் பாலசிங்கம் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினர்.

எம். தங்கராசா, எம். சின்னராசா, எம். பாஸ்கரன், எம். தர்மலிங்கம் ஆகிய நான்கு சகோதரர்கள் அடையாள அணிவகுப்பிற்கு என விளக்கமறியலிலிருந்து கொண்டுவரப்பட்டனர். இந்நான்கு சந்தேக நபர்களில் இலட்சுமி பெண் செல்லன், பொன்னன் முருகன் ஆகிய இரு சாட்சிகளும் ஒருவரை மட்டும் அடையாளம் காண்பித்தனர், நீதிமன்ற சார்ஜண்ட் எஸ். ரவீந்திரராசா அடையாள அணிவகுப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

சந்தேக நபர்கள் அடுத்த மாதம் 3-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரிட்டிஷ்

# பிரபுக்கள்சபையை நீக்கும் மசோதா

## காமன்ஸ் சபை ஆலோசிக்க மறுப்பு

லண்டன், ஜூன் 27

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இரண்டாவது சபையான பிரபுக்கள் சபையை அறவே நீக்கி விடுவதற்கான மசோதாவை பிரிட்டிஷ் காமன்ஸ் சபை பரிசிலனைக்கு எடுக்க மறுத்து விட்டது.

பிரபுக்கள்சபையை நீக்கிவிட வேண்டுமெனக் கோரும் மசோதாவை ஆளும் கட்சியான தொழிற்கட்சியைச் சேர்ந்த 60 எம். பி. க்கள் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க முன்வந்தனர்.

## பீஹாரில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படலாம்

பட்னா, ஜூன் 27

பீஹாரில் ஆளுங்கட்சி ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அங்கு ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

பீஹார் அரசியல் நிலைமை சம்பந்தமான கவர்னரின் அறிக்கை இன்று புதுடில்லியில் எதிர்பார்க்கப்படுகிறது

ஆனால் பீஹார்பற்றிய இறுதி முடிவு சனிக்கிழமை வரைஎடுக்கப்படாதுஎன்றே தெரிகிறது.

இப்போது காஷ்மீரில் உள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சனிக்கிழமை காலை புதுடில்லி வந்து சேர்விருக்கிறார். பூனாவில் தற்போதுஇருக்கும் உள்துறை மந்திரி திரு. சவான் நாளை புதுடில்லி வருவார்.

### கவர்னர் மறுப்பு

மந்திரிசபை ஒன்றைஅமைப்பதற்குத் தமக்கு மூன்று நாள் அவகாசம் அளிக்கும்படி பீஹார் சட்டசபையின் காங்கிரஸ்தலைவர் திரு. மகேஸ்வர பிரசாத்சிங் கேட்டிருந்த கோரிக்கையை கவர்னர் முன்னதாக நிராகரித்துவிட்டார்.

நேற்று கவர்னர் திரு. சின்ஹாவை அழைத்து உடனடியாகவே மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஆனால் திரு. சின்ஹா இது பற்றித் தமது கட்சியுடனும் வேறு சில கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தவேண்டியிருப்பதாகவும் மூன்றுநாள் அவகாசம் தருமாறும் பதிலளித்தார்:

நிதிஒதுக்கீடு மசோதா சட்டசபையின் பரிசிலனைக்குச் சமர்ப்பிக்க வேண்டியது மிக அவசியமாக விருப்பதால் உடனடியாக அரசாங்கம் அமைக்கவேண்டுமென்றும் மேலதிகமாக அவகாசம் எதுவும் இச்சந்தர்ப்பத்தில்அளிக்க முடியாதென்றும் கவர்னர் மறுத்துவிட்டார்.

---

## "மாவட்டசபைக்கு யாரை தெரிவு செய்யலாம்"

வட்டுக்கோட்டை, விசா.

"உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்கின்றனர். இவர்கள் தமக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் மாவட்டசபையில் அங்கத்தவராவது ஜனநாயகதத்துவத்திற்கு பொருந்தும் இதேபோன்று பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் மாவட்டசபையில் அங்கம்வகிக்கலாம் இதே போன்று மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அமைச்சர் பதவி பெற்ற ஒருவரால் மாவட்டசபைக்கு நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெறின் அதுவும் ஜனநாயக தத்துவத்திற்கு உட்பட்டதாகும்"

வலி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சமாஜ மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவாளர்தினக் கருத்தரங்கில் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கே நேசையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

---

## இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன், விசா.

புத்தளை மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கே. மகாலிங்கமும், புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். இராசரத்தினமும் இம்மாதம் உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# டி கோல் ஆதரவாளர்க்கும் எதிர்ப்பாளர்க்கும்நேரடிப்போட்டி

## அடுத்த ஞாயிறு நடைபெறும் பிரான்ஸின் 2-வது சுற்றுத்தேர்தல்

பாரீஸ், ஜூன் 27

அடுத்தஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் பிரான்ஸ் பொதுத்தேர்தலின் இரண்டாவது கட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் இரண்டே இரண்டு முகாம்களாகப் பிரிந்து நிற்குமென்றுதெரிகிறது. டி கோலுக்கு ஆதரவான கட்சிகள் ஒரு முகாமிலும், டி கோலுக்கு எதிரான கட்சிகள் மறு முகாமிலுமாக எதிர்த்து நிற்கும். கட்சிகளிடையே நடைபெறும் உடன்படிக்கைகளும், பேரங்களும் இதற்கு வழிவகுத்துள்ளன.

பிரான்ஸின் தேசியசபைக்கான முதலாவது சுற்றுத் தேர்தலில், சபையின் ஸ்தானங்களில் மூன்றில் ஒரு பங்குக்கே முடிவு எடுக்கப்பட்டது. மீதி இரண்டில் ஒரு பங்கான 319 ஸ்தானங்களும், அடுத்தஞாயிறு நடக்கவிருக்கும் இரண்டாவது சுற்றுத்தேர்தலிலேயே முடிவு செய்யப்படும்.

முதலாவது சுற்றுத்தேர்தலில் 6 சத விதம் தமது பலத்தை அதிகரித்துள்ள டி கோல் கட்சியினரும், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் எதிர்கட்சியினரைப் போலவே, இரண்டாவது சுற்றுத்தேர்தல்களின் முடிவு எப்படி அமையுமோ என்பது பற்றிக் கவலைகொண்டுள்ளனர்.

இரண்டாவது சுற்றுத்தேர்தலில், 200க்கு மதிகமான ஸ்தானங்களில், டி கோல் கட்சி அபேட்சகர் அல்லது டி கோல் கட்சியினர் ஆதரிக்கும் ஒரு அபேட்சகருக்கும், இடதுசாரி முகாமின் ஒரே யொரு அபேட்சகருக்குமிடையே நேரடிப்போட்டியே இருக்குமெனப் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய பலன்

[28- 6 - 68]
ஆனி மீ 15 உ
வெள்ளிக்கிழமை

திதி- துதியை காலை 6-31 வரை மேல் திருதிகை.

நட்சத்திரம்- பூசம் இரவு 12-57 வரை மேல் ஆயிலியம்.

ராகுகாலம் - 10-26 11-56

சுபநேரம்- 5-56— 7-26.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு தொழிற் கவலை, ஆணவர் பகை, உத்தியோகத்தர்களுக்கு பொறுமை வேண்டும். சிறுவர்களுக்கு பிணி சீற்றமுண்டு. கைத்தொழில் புரிவோர் கவலையடைவர் வணிகத்துறையில் நம்பிக்கை மோசடி. வனிதையர் வாழ்வுக்கு இவ்வாண்டு நல்லாண்டாகவாம்.

மேஷம்- தொழிலாற் சிறப்பு தொண்டுள்ளம்.
ரிஷபம்- நிதானப் போக்கு நிலைமையில் உயர்வு.
மிதுனம்- இருண்டநிலை இக் கட்டான வாழ்வு.
கடகம்- அடிசறுக்கும் ஆணவத்தை அடக்கு.
சிம்மம்- சொற்சிறப்பு சொகுசான வாழ்வு.
கன்னி- மோசடி நடக்கும் விழிப்புடன் இரு.
துலாம்- வாகனம் செலுத்துவதில் அவதானம் வேண்டும்.
விருச்சிகம்- புதிய பாதை இன்பத்தின் சாயல்.
தனுசு- அரசாயம் அவசரம் வேண்டும்-
மகரம்- கவலைகள் மறக்கும் இனிமையும் உண்டு.
கும்பம்- தொழிற் குறைவு தொல்லையுமுண்டு.
மீனம்- குருவின் வாக்கு குணமான போக்கு.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 28-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 தமிழ்ப்பாடல்கள், 7-30 பண்ணுறிந்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய நேயர்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 ஞானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை — வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷனில் இருந்து அஞ்சல், 6-45 பாவளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 உரைச்சித்திரம், 10-15 தேர்ந்த இசை.

கிளிநொச்சி

## பட்டினசபையில் மூவர் பதவியிழந்தனர்

[illegible] மூம்பு, வியாழ கிளிநொச்சி பட்டின சபை [illegible] வரான திரு வி ஆனந்தசங்கரி உபதலைவர் திரு. இ கிருஷ்ணராசா உறுப்பினர் திரு. வே மார்க்கண்டு ஆகியோர் பதவி இழந்தார்கள்.

கிளிநொச்சி பட்டினசபையின் முதலாவது தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இம் மூவரும் முறையாக தெரிவு செய்யப்படவில்லையென நேற்று முன்தினம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது.

திரு. வி ஆனந்தசங்கரி, திரு இ கிருஷ்ணராசா, திரு வே மார்க்கண்டு ஆகிய மூவரும் கிளிநொச்சி பட்டினசபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டது முறையற்றது என கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் முருகேசு உயர் நீதிமன்றத்தில் [illegible] செய்த ஆட்சேப மனுவைவிசாரணை செய்த நீதியரசர் ஏச். என். ஜி பெர்னாண்டோ, நீதியரசர். திரு. சிறிமானே முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

மூன்று எதிர் மனுதாரர்களும் கிளிநொச்சி பட்டின சபைக்கு சட்டபூர்வமாக தெரிவு செய்யப்படவில்லை என்றும், மூன்று எதிர் மனுதாரர்களும், மனுதாரின் மனுச் செலவுப் பணமாக தலா ரூபா 105 வீதம் செலுத்துமாறும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

## சொந்த இடங்களுக்கு இடமாற்றம்

யாழ் பாணம், வெள்ளி வெளிமாகாணங்களில் கடமையாற்றும் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு அடுத்தமாதம் முதல் இடமாற்ற உத்தரவுக்குள்ளாகியுள்ளார்கள்.

சிறுபான்மைத்தமிழ்மாணவர்களின் நலன்கருதி இந்த ஆசிரியர்களை சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டுமென சாவகச்சேரி எம். பி திரு. நவரத்தினம், முன்னாள் செனட்டர் திரு. நல்லையா, ஆசிரியர் நடராசா ஆகியோர் தலைமையில் சென்ற தூதுகோஷ்டி ஒன்று அண்மையில் கல்வி அமைச்சரைக் கோரியிருந்தது. [ஈ. நி]

## பொருள்கள் கட்டுப்பாட்டை உடன் நீக்கவும்

### சுழிபுரம் கிராமசபை பிரதமருக்கு கோரிக்கை

சுழிபுரம், வியாழன் பொருள்கள் கட்டுப்பாட்டுச்சட்ட அமுலினால் சுழிபுரம் கிராமசபை எல்லைக்குட்பட்ட மக்கள் பலத்த கஷ்டத்துக்குள்ளாகின்றனர் எனவும் இச்சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற்று பாமர மக்களைப் பாதுகாக்கும்படியும் சுழிபுரம் கிராமசபையினர் பிரதமர், உள்ளுராட்சி அமைச்சர் ஆகிய இருவரையும் கோரியுள்ளனர்.

கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் பிரதிகள் உடன் அனுப்பி வைக்கப்பட்டன.


## அஞ்சல்தொலைதொடர்புசேவையாளர் சங்கத்தின் வெற்றியும் தோல்வியும்

அளவெட்டி, வியா. "அஞ்சல் அதிபர் தந்திவானர் சேவையில் நடைபெறும் இடமாற்றங்களில் நிர்வாகத்தினரால் உத்தரவிடப்பட்ட சில இடமாற்றங்கள் பற்றி நாம் அதிருப்திப்பட வேண்டியிருக்கிறது. வேற்று நடவடிக்கைகளும் வெளியார் தலையீடுகளும் இடமாற்ற திட்டத்தை குறைகூற வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது. கடந்த நாலாண்டுகளில் இப்போதுதான் இவ்வித தலையீடுகளில் குறிப்பிடத்தக்க வேசர் திடீர் வேகத்தைக் காண முடிந்தது"

இவ்வாறு ஜூலைமாதம் 1-ம் திகதி கொழும்பில் நடைபெற விருக்கும் அகில இலங்கை அஞ்சல்தொலைதொடர்பு சேவையாளர் சங்கத்தின் 22 வது மகாநாட்டில் சமர்ப்பிக்கப் படவிருக்கும் அறிக்கை தெரிவிக்கிறது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இவ்வாண்டு நாம் அடைந்துள்ள வெற்றிகளில் மிக முக்கியமானதென்று நாம் குறிப்பிடக் கூடியது பெண் தொலைபேசி இயக்குநரினதும் மொனிட்டர்களினதும்

[6-ம் பக்கம் பார்க்க]




## எவர் மனதையும் விட்டகலாத மங்கை...

உங்களோடு பழகும் எவரின் மனதையும் விட்டகலாத அழகு லாவண்ணியக் கவர்ச்சிப் பாவையராகத் திகழுங்கள். அவரவர் மனதுக்கிசைந்த எழு வித வாசனைத் தினுசுகள் கொண்ட கோயா பெர்பியூமும் கோயா கொலோனும் உபயோகியுங்கள். உலகப் புகழ் வாய்ந்த வாசனைப்பொருட் தயாரிப்பாளர்களால் உருவாக்கப்பட்டவை இவை

மற்றவர் மனங்கவர் மங்கையராகத் திகழும் மாதர் அனைவரும், உலகெங்கும் உபயோகிக்கும் உன்னத வாசனைத்திரவியங்கள் — பிளாக் ரேஸ், கார்டினியா, என்டைஸ், பாஸ்போட், லவ் அஃபயர், கோயா நம்பர் 5, வைல்ட் சில்க்.




Goya

லண்டன் — பரிஸ் — நியூயார்க் மா நகரங்களில் மகிமை பெற்றது கோயா.

றெக்கிட் அன்ட் கொல்மன் தயாரிப்பு.

RC-1408


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
# இல்ல விளையாட்டுப் போட்டி

1-7-68 திங்கட்கிழமை பி. ப. 3 மணி

பிரதம விருந்தினர்:

**திரு. A. S. கனகரத்தினம் தம்பதிகள்**

பெற்றோர், பழைய மாணவர், அன்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

847


### கிராமசபைகள் கட்டளைச் சட்டம் 17-ம் பிரிவின் படியான அறிவித்தல்

N 1695-1961ன் 60ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச்சபைகளின் கட்டளைச் சட்டத்தில் [அத்தியாயம் 257] 17[1]ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு சுப்பிரமணியம் முருகவேள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையின் பத்தி 1ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபைகள் ஒவ்வொன்றினதும் அந்த அட்டவணையில் பத்தி 11ல் உள்ள ஏற்றபதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் 111ல் உள்ள ஏற்றபதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையின் பத்தி 4ல் குறிக்கப்பட்ட இடத்தில் கூட்டுகிறேன்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
19-6-68.

சு. முருகவேள்,
உள்ளூராட்சி உதவி
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

அட்டவணை.

| பத்தி 1 இராமச்சபையின் பெயர். | பத்தி11 திகதி. | பத்தி111 நேரம். | பத்தி4 இடம். |
|---|---|---|---|
| குடத்தனை. | 8-7-1968. | 11.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், குடத்தனை. |
| புலோப்பளை. | 10-7-1968. | 9.30 காலை. | கிராமச்சபை அலுவலகம், புலோப்பளை. |
| செம்பியன்பற்று. | 10-7-1968. | 11.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், செம்பியன்பற்று. |
| கைதடி. | 12-7-1968. | 9.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், கைதடி. |
| நாவற்குழி. | 12-7-1968. | 10.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், நாவற்குழி. |
| சாவகச்சேரி. | 12-7-1968. | 11.30 காலை. | கிராமச்சபை அலுவலகம், சாவகச்சேரி. |
| கொக்குவில். | 13-7-1968. | 9.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், கொக்குவில். |
| நல்லூர். | 13-7-1968. | 10.30 காலை. | கிராமசபை அலுவலகம், நல்லூர். |
| உடுவில். | 14-7-1968. | 9-30 காலை. | கிராமச்சபை அலுவலகம், உடுவில். |
| தெல்லிப்பளை. | 14-7-1968. | 11.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், தெல்லிப்பளை. |
| மயிலிட்டி. | 14-7.1968. | 12.30 மாலை. | கிராமச்சபை அலுவலகம், மயிலிட்டி. |
| கச்சாய். | 15-7-1968. | 9.30 காலை. | கிராமச்சபை அலுவலகம், கச்சாய். |
| வறணி. | 15-7-1968. | 11.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், வறணி. |
| துணுக்காய். | 16-7-1968. | 11.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், துணுக்காய். |
| புங்குடுதீவு. | 19-7-1968. | 9.30 காலை. | கிராமச்சபை அலுவலகம், புங்குடுதீவு. |
| நயினாதீவு. | 19-7-1968. | 11-30 காலை. | கிராமச்சபை அலுவலகம், நயினாதீவு. |
| நெடுந்தீவு. | 21-7-1968. | 9.00 காலை. | கிராமச்சபை அலுவலகம், நெடுந்தீவு. |
| இரணைதீவு. | 23-7-1968. | 12.00 மதியம். | கிராமச்சபை அலுவலகம், இரணைதீவு. |

GP 6284

### அஞ்சல்......

[4ம் பக்கத் தொடர்ச்சி] உச்ச சம்பவங்களில் உடனடியாக நிகழ்ந்துள்ள உயர்வுகளேயாகும். எமது உறுப்பினரில் ஒரு பகுதியினரான இவர்களின் நீண்டநாளைய கஷ்டங்களுக்கு இதுவோர் வரப் பிரசாதமாகும்.

நாம் வெற்றி பெற்றுள்ள இன்னுமோர் விஷயம் எமக்கு மாத்திரமல்ல சகல அரசாங்க சேவைத் தொழிற்சங்க இயக்கங்களுக்கும் நன்மை பயப்பதாகவுள்ளது. அது தொழிற்சங்க கடமை புரிவதற்கென முழுநேர உத்தியோகத்தராக நியமிக்கப் படும் உத்தியோகத்தர் தொழிற்சங்க வேலை சம்பந்தமாகபிறநாடு செல்ல நேரின் அதற்கான லீவுகள் அவர்களின் சொந்த லீவுகளிலிருந்து அறவிடப்படமாட்டா தென்பதேயாகும்.

### கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச்சங்க 'கன்ரீனை' பொறுப்பேற்று நடத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும். முடிவு திகதி 10-7-68. விபரங்களுக்கு காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

மு. சோமசுந்தரம்,
கௌரவ காரியதரிசி
27-6-68. 849

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரி மடம், பண்ணை 5 சந்தி, தட்டாதெரு முதலிய உப-மின்சார நிலையங்களினால் பயனடையும் பாவனையாளர்கள்.

அத்தியாவசிய பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் 1968-ம் ஆண்டு யூலை மாதம் 1-ம் திகதி காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணி வரைக்கும், 1968-ம் ஆண்டு யூலை மாதம் 2-ம் திகதி காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரைக்கும் மின்சார விநியோகம் தடைப்படுமென்பதை மேற்படி பாவனையாளர்கட்கு அறிவித்தரப்படுகிறது.

வே. தங்கவேலு
பதில் ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம். 26-6-68.
848

பூநகரி, வியா.
பூநகரி பத்தினிப்பாய்பின் ளையார் வருடாந்தப்பொங்கல்விழா அடுத்தமாதம் 1-ம் திகதி ஆரம்பமாகி 3-ந் திகதி முடிவடையும். ந.நி.

### மானேஜர் தேவை

கந்தர்மடம் - திருநெல்வேலி ஐ. ப. சாலைக்கு மானேஜர் தேவை. G. C. E. பரீட்சையில் கணிதபாடம் சித்திபெற்றவராய்-கூட்டுறவுப் பயிற்சித் தராதரமுடையவராய்- 25—35 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும். காசுப்பிணை ரூபா 1000/- ஆதனப்பிணை 2000/- அல்லது காசுப் பிணை ரூபா 2000/- மாதச் சம்பளம் விற்பனவுகாரனுக்கும் சேர்த்து எல்லாப்படிகளுமுட்பட ரூபா 160/- 10-7-68க்கு முன் விண்ணப்பிக்குக. விண்ணப்பத்துடன் கல்விப்பத்திரங்கள், பிறப்புப்பத்திரம், 2 நன்னடத்தைப்பத்திரம் இணைக்கப்படவேண்டும்- ஒரு நன்னடத்தைப்பத்திரம் இறுதியாகப்படித்த பாடசாலை அதிபரிடம் பெற்றிருக்க வேண்டும். காரியதரிசி கந். திரு. ஐ. ப. சாலை, பலாலி றோட் கந்தர்மடம் என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரிற் கொடுக்குக. தெரிவு செய்யப்படுபவர். 1-8-68-ல் பதவியேற்கவேண்டும்.

ம. அம்பலவாணர்,
கௌரவ காரியதரிசி.
725

Karampon M. P. C. S. requires a Co-operative trained (English medium) General Manager to take charge of accounts & General management of stores.

Security cash Rs. 2000/- Property Rs. 5000/- Sallary according to ability & experience. Apply President, Karampon M.P.C.S. Kayts. 1392

## வரி விளம்பரம்

### வைத்தியம்

தொய்வு, வாதம், கிரந்தி, கெற்பரோகம், சொறி, சிரங்கு மற்றும் சகலவித சரும ரோகங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் செல்வி இவா. வேலாயுதம், 67, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 1578

### தேவை

பாவித்த தமிழ் தட்டெழுத்து இயந்திரம் வாங்கப்படும். தொடர்பு கொள்ளவும். ஹேமாலி பாடசாலை, கண்டி வீதி, இவிதொச்சி. 1388

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் சத்திரச் சந்தியில் கடை வாடகைக்குண்டு. விபரங்கட்கு வைத்தியர் அரசபின்னைநடராசா, அரசவீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 1391

### காணவில்லை

கிளிநொச்சி செட்டிக்குளம் கிழக்கு கிராமச்சபை உப. பற்றுச்சீட்டு தொ. இல. 2. கொண்ட றிசிட் புத்தகம் 30-5-68-ல் 2-30 யாழ்தேவியில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1386




கனை கட்டி
வெங்காய
விளைச்சலைப் பெருக்கும்
டக்தல்

வெங்காயம் புதைத்து 2-3 நாட்களில் ஏக்கருக்கு 6-8 றுத்தல் 40 கலன் நீரில் கலந்து பாவித்தல் எல்லா களைகளை கட்டுப்படுத்தும்.

ஹேலீஸ் லிமிட்டட்
HAYLEYS
400 டீனஸ் ரோட் கொழும்பு 10
தபால் பெட்டி 70 தொலைபேசி 96333

VISION

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

புரோவின்ஷல் டிஸ்ற்றி பியூட்டர்ஸ் லிமிட்டெட் கம்பனி
யாழ்ப்பாணம்.

வடமகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் கி. சபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

நேற்று நடைபெற்ற மானிப்பாய் கிராமசபைத் தேர்தலில் ஒருவர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். மொத்தமாக 15 வட்டாரங்களிலும் 35 பேர் போட்டியிட்டனர். நாலு பேர் கட்டுப்பணத்தை இழந்தனர்.

தேர்தல் முடிவுகள் வருமாறு:-1-ம் வட்டாரம்: திரு. எஸ். இராசதுரை 259, திரு ஏ. வி. சுப்பிரமணியம் 197. 2-ம் வட்டாரம்: திரு. எஸ் மார்க்கண்டு 336, திரு. ஏ. வி. சுப்பிரமணியம் 113. 3-ம் வட்டாரம். திரு. ஆர். சுமனேந்திரம் 244, திரு. எஸ். கந்தையா 143. 4-ம் வட்டாரம்: திரு. கே. நாகலிங்கம் 264, திரு. வி. அரசலிங்கம் 138, திரு. கே. தம்பித்துரை 165. 5-ம் வட்டாரம்; திரு. வி. கஸ்பார் 257, திரு. ரி செமமாலை 240, திரு. என். திருநாவுக்கரசு 25. 6-ம் வட்டாரம்: திரு. எம். யோகரத்தினம் 242, திரு. ரி. பூபதி 150. 7-ம் வட்டாரம்: திரு. கே. கணேசவேல் 192, திரு. எஸ். பாலராசா 153, திரு என் தர்மபாலன் 156. 8-ம் வட்டாரம்; திரு. என். மகேசன் (போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்) 9-ம் வட்டாரம்: திரு ஆர் விஜயகுலசிங்கம் 158, திரு வி சிவஞானம் 132. 10-ம் வட்டாரம்: திரு கே சுப்பிரமணியம் 453, திரு ஏ முத்துக்குமாரு 174. 11-ம் வட்டாரம்: திரு எஸ் கணேசன் 255, திரு எஸ் பரமன் 181 12-ம் வட்டாரம்: திரு ஏ ஜெயசிங்கம் 358, திரு ஏ செல்லையா 250. 13-ம் வட்டாரம்: திரு எஸ் ஞானசுந்தரம் 304, திரு பி சண்முகம் 179 திரு பி துரைராசா 05, திரு எம் கனகரத்தினம் 05. 14-ம் வட்டாரம்: திரு எம் சுந்தரமூர்த்தி 335, திரு என் சுந்தையா 206, திரு எஸ் கிருஷ்ணன் 07. 15-ம் வட்டாரம்: திரு ஏ சதாசிவம் 377, திரு எஸ் செல்வராசா 191 (ந நி)

---

உள்ளூராட்சி அமைச்சின்

## கார் விபத்தில் சிக்கியது

வவுனியா, புதன்

உள்ளூராட்சி அமைச்சைச் சேர்ந்த கார் ஒன்று வவுனியாவில் மாடு ஒன்றுடன் மோதியதால் இன்று விபத்துக்குள்ளானது. வருகிற 28-ம் திகதி அச்சுவேலியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக கொழும்பிலிருந்து அச்சுவேலிக்கு சில அதிகாரிகள் வந்து கொண்டிருந்த சமயத்திலேயே கார் விபத்துக்குள்ளானதாம்.

காரிலிருந்த நால்வர் கடுகாயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நேர்மையுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இசைக்கு இறைவன், இறைவனுக்கு இசை என்று நமது முன்னோர்களால் வகுக்கப்பட்டுள்ளது அத்தகைய சிறப்புமிக்க கலையை விற்பனைப் பொருளாக ஆக்கக்கூடாது கலைக்கு இன, மத, மொழி வேறுபாடு இருக்கக்கூடாது அவ்வாறு வேறுபாடு இருந்ததும் இல்லை

கலைஞர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பதில் தவறு இல்லை ஆனால் கலை என்று வரும்போது எல்லோரும் தமது வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் தமிழ்நாட்டிலிருந்து வரும் சிலர் நேர்மையற்ற முறையில் நடந்துகொள்வதனால் இங்கு உண்மையாக வர விரும்புபவர்களுக்குத் தடையேற்படுகிறது. இந்த இழிநிலை மாறவேண்டியது அவசியம் அங்கு இருந்து வருபவர்கள் நேர்மையானவர்கள் அவர் வருவதனை அனுமதிக்கலாம் என்ற மனோபாவத்தை அவர்கள் உண்டாக்கவேண்டும்

இலங்கையிலும் இந்தியாவிலும் கலைஞர்கள் தொகை குறைந்துகொண்டே வருகிறது இளம் கலைஞர்களை இத்துறையில் ஊக்குவிப்பது ரசிகர்களது கடமை நிகழ்ச்சியை குறை கூறும் உரிமையுள்ளது போல பாராட்டினையும் உடனுக்குடன் தெரிவிக்கவேண்டும் இளம் கலைஞர்களது குறைகளைப் பொருட்படுத்தாது அவர்களை ஊக்குவித்தால்தான் இசைக்கலை வளரமுடியும்

கலைஞர்கள் அங்கிருந்து அடிக்கடி இங்கு வந்து போகவேண்டிய சூழ்நிலை உருவாக தமிழக அரசுடன் தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன் அதுபோல இங்கு உள்ள கலைஞர்களும் அங்கு வந்துபோக முயற்சிகள் எடுக்கவேண்டும்

ரசிகர்களை திருப்திப்படுத்தும் வகையில் விழா முதலில் தமிழ்த்தாய் வணக்கம் பாடினார். [ஊ நிரு]

## நாடக கலைஞர் தலைநிமிர காரணமாய் இருந்தவர்

### வேணன் அபயசேகராவுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.

''யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டரை வருடங்களில் நாடக வளர்ச்சி ஏற்பட்டுள்ளதற்கும், யாழ்ப்பாணத்துக் கலைஞர்கள் இன்று தலைநிமிர்ந்து நடப்பதற்கும் காரணமாகவிருப்பவர் திரு. வேணன் அபயசேகராவே''

இவ்வாறு யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி முருகேசம்பிள்ளை தெரிவித்தார்.

திரு. வேணன் அபயசேகர இடமாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு யாழ். பிரதேச கலாமன்றத்தால் நேற்று அளிக்கப்பட்ட பிரியாவிடையில் திரு. ரி. முருகேசம்பிள்ளை மேலும் பேசுகையில், திரு. வேணன் அபயசேகரா ஒரு அரசாங்க ஊழியராக மட்டும் இல்லாமல் யாழ்ப்பாணத்துக் கலைக் கலாச்சார வளர்ச்சியில் ஊன்றுகோலாக இருந்தாரென்றும் குறிப்பிட்டார்.

வட.மாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் பேசுகையில் திரு. வேணன் அபயசேகரா ஒரு கலாச்சார மனிதன் எனக் குறிப்பிட்டார். சமூக சேவை அதிகாரி திரு. என். சிவசிதம்பரம் பேசுகையில், திரு. வேணன் இலங்கைக் கலைக் கழகத்தில் மேல்நாட்டு இசைக் குழுத் தலைவராக இருக்கிறபோதும், பரதநாட்டியம், கர்நாடகஇசை ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கூடிய பங்கு கொண்டவர் என்றார்.

திரு. வேணன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். [கா. நி]

---

திருமலைச் செய்திகள்

## ''தமிழ்ப்பெண் இனத்துக்கு கோவில் கட்டுவோம்''

— கவியோகி

திருக்கோணமலை, வியாழன்

''எமது தமிழ்ப் பெண் இனத்துக்கு நாம் கோயில் கட்டி வணங்கவேண்டும். அந்தப் பெருமைக்குரிய அளவுக்கு அவர்கள் தமிழ் பண்பாடுடன் இருக்கிறார்கள்.'' கவியோகி சுத்தானந்த பாரதியாருக்குத் திருக்கோணமலை நகரசபையினர் அளித்த பொது வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசுகையில் பாரதியார் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

''இன்று பெண்கள் நாகரிகத்தினால் பண்பிழந்து வாழ்கின்றார்கள். நாளுக்கு நாள இவர்களின் உடைகள் உயர்ந்து கொண்டே செல்கின்றது. ஜெனிவா தேசத்திலே பெண்கள் தம் கணவன்மார்களுக்கு அபின் என்னும் போதை மருந்தைக் கொடுத்துக் கண் உறங்கச்செய்துவிட்டு இரவு ராணிகளாக ஊர்சுற்றக் கிளம்பி விடுகிறார்கள். அந்த அளவுக்கு இன்று நாகரீகம் வளர்ந்துள்ளது. இந்தியாவில் தமிழ்நாட்டுப் பெண்கள் எவ்வளவோ மேல். அதனால் அவர்களுக்கு நாம் கோயில் கட்டிவணங்க வேண்டும்''

### 'உலகிலேயே சிறந்த பஸ் சேவை''

உலகிலேயே மிகச் சிறந்த பஸ் சேவை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் பஸ் சேவைதான்' என்று இலங்கைப்போக்குவரத்துச் சபையின் அனுராதபுர பிராந்திய மனேஜர் திருக்கோணமலை மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் ஒன்றில் கூறினார்.

திருக்கோணமலை பஸ் சேவையின் சீர்கேடுகள் பற்றி பலர் கண்டனம் தெரிவித்ததற்குப் பதிலளித்துப் பேசுகையில்தான் அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

### இரண்டரைலட்சம் ரூபா சும்மாவிருக்கிறது

இன்னும் ஒருஇடம் தெரிவு செய்யப்படாததால் திருக்கோணமலைக்குஒரு நவீனபஸ் நிலையம் நிறுவுவதற்கு என அரசாங்கம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஒதுக்கிய இரண்டரை லட்சம் ரூபா உபயோகப்படாமலேயே இருக்கின்றது.

### மீனவருக்கு குடியேற்ற திட்டம்

திருக்கோணமலையில் மீனவர்களுக்கு வீடமைப்புத்திட்டம் ஒன்று விரைவில் நிறுவப்படவிருக்கின்றது. 6 ஏக்கர் காணியில் 50 குடும்பங்களுக்கு என்று இந்த வீடமைப்புத்திட்டம் உருவாக்கப்படும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடுகட்டுவதற்கான நிலமும் பணமும் வழங்கப்படும். ஆனால் 10 ஆண்டு காலம் மீன்பிடித்தொழிலில் அனுபவம் வாய்ந்தவர்களுக்குத்தான் இத்திட்டத்தின் கீழ்க் காணிகள் வழங்கப்படும் என்று தெரியவருகின்றது.

---

ஆலயப்பிரவேசம்:

### அரசாங்கஅதிபர்— சுப்பிரிண்டன் பேசுவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமான பேச்சுவார்த்தையொன்றை அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துடன் இன்று மேற்கொள்வர். அரசாங்க செயலகத்தில் காலை 10 மணிக்கு இப்பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது. (கா. நி.)

---

### தலைக்கு வந்தது தலைப்பாகையுடன்...

கொழும்பு, வியாழன்

கொழும்பு புகையிரத நிலையத்துக்கு முன்னால் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவர் தமது சட்டைப் பையிலிருந்த 800 ரூபாய்களை முடிச்சுமாறிகளிடம் பறிகொடுத்தார். ஆயினும் பறிகொடுத்த பணத்தில் 650 ரூபாவை உடன் அருகே நின்றவர்கள் மீட்டுக் கொடுத்தனர். (ஊ. நி.)

---

### பஜனை

யாழ்ப்பாணம், வெள்ளி

அடியார்களின் பஜனைப் பாதயாத்திரை ஒன்று நல்லூர் பருத்தித்துறை வீதியிலிருந்து வரும் 1ம் திகதி 5 மணிக்குப் புறப்பட்டு முத்திரைச் சந்தை வீதி செம்மணி வீதி கண்டி வழியாக கைதடி நுணாவில் சிவபூதராயர் தேவஸ்தானத்தை அடையும்.


கிங்ஸ்லி பிளாசா மைலன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜிதா (புட்டளம்) அயன் (மன்னார்)

★ ஜெமினி கணேசன்

★ கே. ஆர். விஜயா

நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு



ராணி (யாழ்ப்பாணம்)

ஜெமினி — சரோஜாதேவி

நகேஷ் — விஜயநிர்மலா

நடித்த

பணமா பாசமா



வின்ஸர்

முத்துராமன்

உதயசந்திரிகா

நடித்த

ராஜாத்தி



கடைசி 2தினங்கள் மட்டும்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சி

ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா

நடிக்கும்

முகூர்த்த நாள்



MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00 & 9-45 P. m.
John Wayne
In
ELDORADO
Color



REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Richard Johnson &
Elke Sommer
In
DEADLIER THAN
THE MALE
[Adults Only]


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org